# அருள்மிகு நித்தியகல்யாணப் பெருமாள் திருக்கோயில்

திருவிடந்தை, திருப்போரூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.

## ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

மேற்படி திருக்கோயிலுக்கு கீழ்காணும் திருப்பணியினை செய்துமுடிக்க ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவுப்பெற்ற பதிவு நடப்பில் உள்ள அனுபவம் வாய்ந்த ஒப்பந்தாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | வேலையின் பெயர் | பணியின் மதிப்பு ரூ. | டெண்டர் படிவ விலை ரூ. | முன் வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்ததாரர் நிலை | பணி செய்து முடிக்க வேண்டிய |
|---|---|---|---|---|---|---|
| 1. | திருக்கோயிலுக்குச் சொந்தமான அலுவலகம், அன்னதான கூடம், பணியாளர் குடியருப்பு புதுப்பிக்கும் பணி | 27,72,371/- (G.S.T உட்பட ) | 10,620/- (G.S.T உட்பட ) | 23,860/- | 3- ம் நிலை அதற்கு மேலும் | 12 மாதம் |

### நிபந்தனைகள்

1. ஒப்பந்தக்காரர்கள் முன் வைப்புத்தொகையினை இத்திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து ஒப்பந்த புள்ளிகள் கொடுக்க வேண்டும். இரசீது இணைக்கப்படவில்லையெனில் ஒப்பந்த புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2. 04.0.2022 முதல் 20.04.2022 வரை மாலை 5.00 மணிவரை (அலுவலக கடிகாரத்தின்படி) மேற்குறிப்பிட்ட பணிக்கு திருக்கோயில் செயல் அலுவலர் அலுவலகத்தில் குறிப்பிட்டுள்ள படிவத்திற்குரிய கட்டணம் செலுத்தி ஒப்பந்த படிவம் பெற்றுக்கொள்ளலாம். மாலை 5.00 மணிக்கு (அலுவலக கடிகாரத்தின் படி) ஒப்பந்த படிவம் விற்பனை நிறுத்தப்படும் மற்றும் http//tntenders.gov.in என்ற இணையதள முகவரில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

3. மேற்படி திருக்கோயில் செயல் அலுவலர் அலுவலகத்தில் 21.04.2022 புதன் கிழமை பிற்பகல் 12.00 மணி வரை (அலுவலக கடிகாரத்தின்படி) மூடி முத்திரையிடப்பட்ட உறையில் பூர்த்தி செய்த ஒப்பந்த படிவங்கள் பெறப்படும் 21.04.2022 புதன் கிழமை அன்று பிற்பகல் 1.00 மணிக்கு (அலுவலக கடிகாரத்தின் படி) அச்சமயத்திலிருக்கும் ஒப்பந்தகாரர்கள் மற்றும் இலாகா அலுவலர்கள் முன்னிலையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் திறந்து பதிவு செய்யப்படும்.

4. எந்த ஒரு ஒப்பந்த புள்ளியையும் எந்த விதமான காரணமும் தெரிவிக்கமால் நிராகாரிக்கவும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் இத்துறை அதிகாரிகளுக்கு முழு அதிகாரம் உண்டு.

5. ஒப்பந்த புள்ளிகள் கோரும் ஒப்பந்தக்காரரின் பண வரம்பு மதிப்பீட்டுத் தொகைக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும்.

6. ஒப்பந்தக்காரர்கள் மேற்கண்ட பணியினை துவக்க (Work order) வேலை உத்திரவு கிடைக்கப்பெற்றவுடன் ஒரு வார காலத்திற்குள் செயல் அலுவலருக்கு ரூ.100/— மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதி கொடுத்தல் வேண்டும்.

7. இந்து சமய அறநிலையத்துறைப் பொறியாளரின் மேற்பார்வையில் வேலையை ஒப்பந்ததாரர் செய்ய வேண்டும். பொறியாளரின் அளவு பதிவின்படி பணம் பட்டுவாடா செய்யப்படும். ஒப்பந்தக்காரர்களுக்கு முன்பணம் வழங்க இயலாது.

8. ஒப்பந்தக்காரர்கள் இடையில் வேலை செய்யாவிடில் அவர் செலுத்திய முன் வைப்புத்தொகை திருப்பி வழங்க இயலாது.

9. ஒப்பந்த படிவத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் ஒப்பந்ததாரர்கள் கையொப்பம் செய்ய வேண்டும். ஒப்பந்த படிவத்தில் அடித்தல், திருத்தங்கள், இருந்தால் ஒப்பந்ததாரர் ஒவ்வொரு அடித்தல் திருத்தலுக்கும் கையொப்பம் செய்ய வேண்டும்.

10. மேற்படி வேலையை கீழ் ஒப்பந்தம் (உள் ஒப்பந்தம்) செய்யக்கூடாது. ஒப்பந்ததாரரே வேலையினை செய்ய வேண்டும்.

11. ஒப்பந்ததாரர் வேலையைச் செய்யும் போது தற்செயலாக ஏற்படும் விபத்துக்களுக்கு ஒப்பந்ததாரர் முழு பொறுப்பாவார்.

12. வேலையை முடித்த பின்னர் தணிக்கை ஆட்சேபனை இலலையென்றால்தான் அனைத்து பிடித்தமும் திருப்பிக் கொடுக்கப்படும்.

13. மேற்படி வேலைக்கு இந்து சமய அறநிலையத்துறை அனைத்து சட்டம் மற்றும் எம்.டி.எஸ். சட்ட விதிகளுக்கு ஒப்பந்தக்காரர் கட்டுப்பட்டவர் ஆகும்.

14. மேலே கண்டுள்ள நிபந்தனைகளில் ஒப்பந்தக்காரல் எதில் தவறினாலும் ஏற்படும் அனைத்து நஷ்டங்களும் ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

15. ஒப்பந்த படிவம் பெறும் ஒப்பந்தக்காரர் அவர் பதிவு செய்துள்ள துறையின் பதிவுச்சான்றிதழ் நகலினை சமர்ப்பித்து ஒப்பந்த படிவத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இங்ஙனம்

ஆ.குமரன்
செயல் அலுவலர்

ஆ.முத்துரெத்தினவேலு
தக்கார் / உதவி ஆணையர்

நாள் : 04.04.2022

இடம் : அருள்மிகு நித்தியகல்யாணப் பெருமாள் திருக்கோயில்,
திருவிடந்தை, திருப்போரூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.